**R 2279 (page 94)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# யோவான்ஸ்நானன் மற்றும் அவரது கொலையாளிகள்

## JOHN THE BAPTIST AND HIS MURDERERS.

இந்த ஒரு பதிவும்கூடத் தவறான மனங்கொண்டுள்ள ஒரு ஸ்திரீயினால் எத்தனை மாபெரும் செல்வாக்கினைச் செயல்படுத்தமுடியும் என்பதைக் காண்பிக்கின்றது. (ஏரோதியாளாகிய) இந்தப் பொல்லாத ஸ்திரீக்கு இடம் கொடுக்கத்தக்கதாக தனது சட்டப்பூர்வமான மனைவியை ஏரோது தள்ளிவிடும் அளவிற்கு, ஏரோது அவளது செல்வாக்கின் கீழ்க்காணப்பட்டான்; தன் தாயினுடைய பொல்லாத விருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு வேண்டி ஏரோதினுடைய இராஜ்யத்தின் பாதியைப் பெற்றுக்கொள்ளும் ஆசையைத் துறந்துவிடும் அளவிற்கு ஏரோதியாளின் மகளும் அவளது செல்வாக்கின் கீழ்க்காணப்பட்டாள். இங்கு நமக்கு முன்புள்ள ஒரு பாடம் என்னவெனில், . . . ஸ்திரீகள் இயல்பாகவே ஆண்களைக் காட்டிலும் உணர்ச்சிப் பூர்வமானவர்களாகவும், அநுகூலமான சந்தர்ப்பங்களில் நல் உணர்வுகளினால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாகவும் இருப்பினும், ஒருவேளை அவர்கள் தீய மனமுள்ளவர்களாகவும், பொல்லாதவர்களாகவும் மாறிப்போனால், இதற்கேற்ப தங்கள் சகோதரர்களைக் காட்டிலும் பொல்லாப்பின் உச்ச எல்லைகளுக்கும்கூடச் சென்றுவிடும் தன்மையுடையவர்களாய் இருப்பார்கள். பாவம் மற்றும் சுயநலத்தின் தீமையான ஆவி இல்லாதவர்களாக மாத்திரம் இராமல், கிறிஸ்துவின் ஆவியினால், பரிசுத்த ஆவியினால் நிரம்பிக் காணப்படுவதும் ஆண்களுக்கு மிக முக்கியமானதாகும்; இப்படியே நன்மை அல்லது தீமைக்கேதுவான உணர்ச்சிகரமான இயல்பை அதிகமாய்ப் பெற்றிருக்கும் ஸ்திரீகளுக்கும் மிக அதிக முக்கியமாய்க் காணப்படும்.

தங்கள் குமாரத்திகள் விஷயத்தில் நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவாக வல்லமை பெற்றிருக்கும் தாய்மார்களுக்கு எத்துணை ஆலோசனை தரும் படிப்பினை இங்குக் காணப்படுகின்றது. வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டது போன்று ஸ்திரீகளின் செல்வாக்குச் செயல்படுத்தப்படுவதற்கான சரியான எல்லை இல்லத்திலே ஆகும் என்று இங்கு நாங்கள் குறிப்பிடுகின்றோம். ஓர் உண்மையான, தூய்மையான, நற்குணமுள்ள, விவேகமான தாயானவள் தன் கணவன் விஷயத்திலும், குமாரர்கள் விஷயத்திலும், தன் குமாரத்திகள் விஷயத்திலும் நன்மைக்கேதுவாய் அல்லது தீமைக்கேதுவாய்க் கிட்டத்தட்ட சொல்லமுடியாத அளவிற்குள்ள செல்வாக்கினைப் பெற்றிருப்பாள். சில நல்ல நோக்கமுள்ள ஆனால் வேதவாக்கியங்களின்படி வழிநடத்தப்படாத தாய்மார்கள் தெய்வீக ஏற்பாட்டினால் தங்கள் கைகளில் வைக்கப்பட்டுள்ளதான குடும்பச் சிலாக்கியங்கள், வாய்ப்புகள் மற்றும் கடமைகளை விட்டுவிட்டு உலகத்தைச் சீர்த்திருத்தம்பண்ணும்படிக்கு உலகத்திற்குள் கடந்து செல்பவர்கள், எத்தனை மாபெரும் தவறு செய்கின்றவர்களாய் இருக்கின்றனர். பெண் சீர்த்திருத்தவாதிகள் மற்றும் மகளீர் வாக்குரிமைக்காகப் போராடும் பெண்களின் குடும்பங்கள் எவ்வளவாய்ப் புறக்கணிக்கப்பட்டுக் காணப்பட்டு, இதன் தீமையான பின்விளைவுகள் கணவன்மார்கள்மீதும், பிள்ளைகள்மீதும் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு தாயானவளும் தன் சொந்தக் குடும்பத்திலும், குடும்ப வட்டாரங்களிலும், கர்த்தருடைய குடும்பமாகிய சபையில் அவளுக்குத் திறக்கப்படும் வாய்ப்புகளிலும், அவள் தனது ஒவ்வொரு தாலந்தையும், வரத்தையும் திவ்விய வசனத்திற்கும், பரத்திலிருந்து வரும் ஞானத்திற்கும் இசைவாகச் செயல்படுத்துவதற்கான திரளான வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றாள் என்பதை உணர்ந்துகொள்வாளாக.

---